ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

# குறள் முழக்கம்



## திருமதி சுகன்யா கல்யாணிசுந்தரம் அவர்களோடு ஒரு நேர்காணல்



*(நேர்காணல் நிகழ்த்தியவர் நம் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தின் அமெரிக்க ஒருங்கிணைப்பாளர் அறிஞர் இர.பிரபாகரன் அவர்கள்)*

**கேள்வி**: திருமதி சுகன்யா கல்யாணிசுந்தரம் அவர்களே! வணக்கம். தமிழ் நாட்டிலிருந்து, உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் என்ற அமைப்பு திங்கள்தோறும் "குறள் முழக்கம்" என்ற மின்மடலை வெளியிடுகிறது. அந்த மின்மடலில் திருக்குறளில் சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளை வெளியிட விரும்புகிறோம். அமெரிக்காவில் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து சாதனை புரிந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்று கேள்விப்பட்டேன். உங்கள் சாதனைகளைப் பற்றி உங்களிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

திருமதி சுகன்யா கல்யாணிசுந்தரம்: வணக்கம்.எனது பெயர் சுகன்யா.கணவர் பெயர் சசிபகவத்சிங், மகள்கள் பெயர் சம்யுக்தா(6), சம்ரித்தா(2).அருப்புக்கோட்டையில் பள்ளிப் படிப்பு முடித்து, திண்டுக்கல்லில் பி இ இன்பர்மேஷன் டெக்நாலஜி படித்தேன். 10 வருடம் ஐ.டி துறையில் பணி புரிந்து இப்பொழுது குடும்பத் தலைவியாக உள்ளேன்.

நாட்டிற்கும், வீட்டிற்கும் நன்மை பயக்கும் வகையில் வாழ்க்கைக்கு தேவையான அனைத்தும் எக்காலத்தும் யாவர்க்கும் பொருந்துமாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவப் பெருந்தகை நமக்கு திருக்குறளை கொடுத்திருக்கிறார். இதை உலகுக்கு ஓங்கி உரைத்திட பேராசிரியர் மறைமலை இலக்குவனார் அவர்களின் தலைமையில் ஆரம்பித்திருக்கும் உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் அமைப்புக்கும் மற்றும் “குறள் நெறி” மின்னிதழுக்கும், “குறள் முழக்கம்” மின்மடலுக்கும், அதன் ஈடு இணையற்ற தொண்டிற்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். உங்களுடன் உரையாடுவதில் மிக்க மகிழ்ச்சி.

**கேள்வி**: நீங்கள் எப்பொழுது திருக்குறளைப் படிக்கத் தொடங்கினீர்கள்?

விரிகுடாக் குறள் கூடம் நடத்திய திருக்குறள் போட்டியில் பங்கேற்க 2015 ஆம் ஆண்டில் இருந்து பொருளுணர்ந்து படிக்க ஆரம்பித்தேன்.

**கேள்வி**: உங்களுக்குத் திருக்குறளில் ஆர்வத்தை உண்டாக்கியவர் யார்?

நண்பர்கள் மூலம் விரிகுடாக் குறள் கூடம் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டி நடத்துவதாக அறிந்தேன். அதில் பங்குபெற்ற குழந்தைகள் முதல் பெரியோர் அனைவரையும் கண்டு நானும் படிக்கத்தொடங்கினேன். பள்ளியில் கற்றதை விட, இப்பொழுது பொருட்சுவை உணர்ந்து வாழ்க்கையோடு ஒப்பிட்டு கற்றது, 1330 குறட்பாக்களையும் படிக்க ஆர்வத்தை தூண்டியது.

**கேள்வி**: 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகியது? அவற்றை எப்படிப் படித்தீர்கள்?

அனைத்து குறட்பாக்களையும் படிக்க நான்கு மாத காலம் ஆகியது. முதலில் நண்பர்களுடன் சாதாரணமாக படிக்க ஆரம்பித்தேன். வாழ்க்கையோடு ஒப்பிட்டு படிக்கும் போது, மிகவும் ரசித்து படிக்க முடிந்தது.படிக்க படிக்க ஆர்வம் வந்து வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் அனைத்து குறள்களையும் படித்து விட வேண்டும் என்ற எண்ணம் ஆழமாக பதிந்து விட்டது.

ஒரு நாளைக்கு பத்து குறள்கள் படிக்க வேண்டும் என்பது என் இலக்காக இருந்தது.அப்படி படிக்கும் பொழுது என்னால் மிகவும் எளிமையாக இலக்கை அடைய முடிந்தது. ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள குறட்பாக்களை ஒரு நிரல் (sequence) ஆக படித்தேன். அதில் என்ன கருத்து இருக்கிறது என்பது ஒரு நிழற்படமாக வரும் பொழுது, குறள்கள் நினைவில் வைக்க மிகச் சுலபமாக இருந்தது.

**கேள்வி**: நீங்கள் "குறளரசி" என்ற பட்டம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பட்டம் உங்களுக்கு யார் அளித்தது? எப்பொழுது அளிக்கப்பட்டது?

விரிகுடாக் குறள் கூடம் மார்ச் 24, 2018 ஆம் ஆண்டு "குறளரசி" என்ற பட்டம்  முனைவர். பாரதி சங்கர் ராஜுலு அவர்களால் வழங்கியது.

**கேள்வி**: எல்லாக் குறளுக்கும் உங்களுக்குப் பொருளும் தெரியும் அல்லவா?

ஒவ்வொரு அதிகாரமும் பல சுவைகள் கொண்டது! கதை வடிவத்தில் சில, கவிதை நடையில் சில ,வாழ்க்கையில் நிகழும் காட்சிகள் சில, அனைத்து

துறைகளுக்கும் பொருந்தும் வகையில் பல என்று சொல்லிக் கொண்டே போகலாம். இதனால் ஒவ்வொரு குறளையும் பொருள் உணர்ந்து எளிமையாக என்னால் படிக்க முடிந்தது.

**கேள்வி**: திருக்குறள், தமிழ் தொடர்பாக நீங்கள் வேறு என்ன பணிகள் செய்து வருகிறீர்கள்?

திருக்குறள் போட்டிகளில் நடுவராகவும், தமிழ்ப் பள்ளியில் தன்னார்வலராக பங்கேற்றும், என்னால் முடிந்த திருக்குறள் கட்டுரைகளையும் எழுதுகிறேன்.

தற்பொழுது நண்பர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் தமிழ் கற்றுக் கொடுக்க உதவுகிறேன்.

**கேள்வி**: தமிழில் வேறு சாதனைகள் புரியும் திட்டம் உள்ளதா?

சாதி, மதம், மொழி கடந்து வாழ்க்கை நெறி சொல்லும் உலகப் பொதுமறையான திருக்குறளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகவும் எளிய முறையில் அர்த்தத்துடன் படிக்க உதவ வேண்டும்.

தமிழ்க் காவியங்கள், இலக்கணங்கள், செய்யுள் ஆகியவற்றை நன்கு படித்து அடுத்த தலைமுறைக்கு கற்றுத் தர வேண்டும் என்பது என் இலக்கு.தமிழில் கதைகள் எழுதவும் முயற்சிக்கிறேன்.

**கேள்வி**: உங்களைப்போல் திருக்குறள் கற்க வேண்டும் என்று யாராவது முயற்சி செய்திருக்கிறார்களா? நீங்கள் மற்றவர்களை ஊக்குவித்திருக்கிறீர்களா?

என்னுடன் பயின்றவர்கள், நண்பர்களை ஊக்குவித்து திருக்குறள் போட்டியில் பங்கு பெறச் செய்திருக்கிறேன்.

திருக்குறள் விழாவில் அனைவருக்கும் சொல்லியது "தினமும் ஒரு குறள் அல்லது ஐந்து என்று படிக்க ஆரம்பியுங்கள். அனைவரும் 1330 குறள்களையும் எளிமையாக படித்து விடலாம்" என்று.

தாய்மார்களிடத்தில் கூறியது :"உங்கள் குழந்தைகள் 500, 1000 குறள் படிப்பதற்கு கற்றுக்கொடுக்கும் நீங்கள் முன் வந்து சிறு முயற்சி செய்து எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் அனைத்து குறள்களையும் படித்து வெற்றி பெற வேண்டும்!" என்று ஊக்குவித்து பங்கு பெறச் செய்தேன்.

**கேள்வி**: உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மூன்று குறட்பாக்களைக் கூறுங்கள்.

நாம் உயிர் வாழ நம் உடல் உறுப்பு ஒவ்வொன்றும் எவ்வளவு அவசியமோ, அதேபோல் நாம் சிறப்பாக வாழ்ந்து காட்ட பேதமின்றி அனைத்து குறளும் நமக்கு அவசியமாக கருதுகிறேன். குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அற்புத படிவம்.எனினும் அதில் சில

1. அறத்துப்பாலில், அறம் என்பது நம் மனதளவில் குற்றமற்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் சொல்லும் சொல் இனிமையாக,பயனுள்ளதாக,தீங்கு தராத சொற்களாக,திறமையுள்ளதாக,தெளிவாக இருக்க வேண்டும் என்று சொற்கள் பற்றியும் பல அதிகாரங்களில் வியந்து சொல்லி இருக்கிறார்.அதில் ஒன்று

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

சொற்களில் அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்தரும் சொற்களையே சொல்லுக; பயனற்ற சொற்களைச் சொல்லவேண்டா.

Speak what s useful and speak not useless words.

2. பொருட்பாலில் அரசாங்கம், அமைச்சரவை, பகை , நட்பு, உழவு, மருத்துவம் மற்றும் பல துறைகளுக்கு தேவையான குறள்கள் உள்ளன. அதில் நான் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றியதால், "தெரிந்து வினையாடல், வினைத்திட்பம், வினைச்செயல்வகை, அவை அறிதலும், அஞ்சாமையும்" மற்றும் பல அதிகாரங்கள் மெய் சிலிர்க்க வைத்து விட்டன.அதில் இரண்டு:

“வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற”

ஒரு செயலை இடையில் விடாது செய்து முடிப்பதற்கான செயல் உறுதி என்பது ஒருவனின் மன உறுதியே. மற்றவை உறுதி எனப்படமாட்டா.

Firmness in action is (simply) one's firmness of mind; all other (abilities) are not of this nature.

3.”மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்”

ஒருவன் முதலில் உண்டது சீரணமாகிவிட்டதை நன்கு அறிந்து அதன் பிறகு உண்டால், அவன் உடம்புக்கு மருந்து என்று ஒன்று வேண்டியது இல்லை.

No medicine is necessary for him who eats after assuring (himself) that what he has (already) eaten has been digested.

நன்றி. உங்கள் அரிய சாதனைகளுக்காக உங்களுக்கு எங்கள் வாழ்த்துகள்!

திருமதி சுகன்யா கல்யாணிசுந்தரம்: மிக்க நன்றி.

நமது வாழ்க்கைப் பயணத்தில் இடுக்கண் வரும் காலங்களில் நல்வழிகாட்டி கரம்பிடித்துச் செல்வதற்கு திருக்குறள் ஒன்றே போதுமானது. இந்த அற்புதக் காவியம் பற்றிப் பேச எனக்கு வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும், "உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம்" அமைப்புக்கும் என் நன்றிகளும் வணக்கங்களும்! தங்கள் தன்னலமற்ற சேவை, இன்னும் பல ஆண்டு மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.வாழ்க வளமுடன்.




திருமதி. சுகன்யா கலியாணசுந்தரம் பெற்ற விருது

விருது பெறும் காட்சி :



*இந்த இதழிலிருந்து பட்டிமன்றம் என்னும் பகுதி தொடங்குகிறது. குறளை மேலும் ஆழமாகக் கற்கத் தூண்டுவதே இதன் நோக்கம்.*

*இந்த இதழில் "திருக்குறள் இறைநம்பிக்கையை வலியுறுத்துகிறதா?" என்னும் தலைப்பில் விவாதத்தைத் தொடக்கி வைக்கிறார் மறைமலை இலக்குவனார். இத் தலைப்பை ஒட்டியும் வெட்டியும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. ஏ4 அளவில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் ஒருங்குறி அச்சுருவில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.*

# பட்டிமன்றம்-1

# திருக்குறள் இறைநம்பிக்கையை வலியுறுத்துகிறதா?

-மறைமலை இலக்குவனார்

திருக்குறள் என்னும் பேரறிவுக்கருவூலம் வாழ்வியற்பல்கலைக் களஞ்சியமாகவும் மனிதநேயத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகவும் மனிதஅறிவைத் துலங்கச்செய்யும் அறிவுவளர்ச்சிக் கருவியாகவும் போரும் பிணக்கும் பூசலும் தவிர்த்து உலக அமைதிக்கு வழிகாட்டும் உலகப்பொதுமறையாகவும் விளங்குகிறது.இதன் அருமை அறியார் வாழ்வை வறிதே கழிக்கும் உயிர்ப்பிணமாகவே கருதற்குரியர். வள்ளுவத்தின் மேன்மையையும் சீர்மையையும் அறிந்து வள்ளுவர் வாய்மொழி வழுவாது போற்றுவோர் வையகத் தலைமைகொள்ளும் பெருமையெய்தி வரலறு படைத்துவருவதனை நாளும் கண்டுவருகிறோம்.

சமயச்சாத்திரநூல்கள் மனிதனைச் சமயச்சிமிழுக்குள் அடைத்து அறிவைத் தளைப்படுத்திவிடுகின்றன. ஆயின்

திருக்குறள் மனிதனுக்கு விரிந்துபரந்த சிந்தனை வழங்கித் தன்னாண்மையுடன் அறிவுத்தேட்டம் மிக்கவனாக மாற்றும் ஆற்றல் பெற்றிலங்குகிறது. சமயங்களால் வேறுபட்டுப் பிளவுற்று முடங்கிவிடாமல் மனித இனத்தை ஒற்றுமைப்படுத்தி உலக ஒருமைப்பாட்டுணர்வை வழங்குவதே திருக்குறளின் தனிச்சிறப்பாகும்.

கௌதம தருமசூத்திரம், போதாயன தருமசூத்திரம், ஆபச்தம்ப தருமசூத்திரம், மானவ தரும சாத்திரம்(மனு) என்று எந்தத் தருமசாத்திரமாக இருப்பினும் பூவுலகத் தெய்வங்களாக விளங்கும் பிராமணர்களின் வாழ்க்கைமுறைகளையும் ஏனையோர் அவர்களுக்குக் குற்றேவல் புரியவேண்டிய கடப்பாடுகளையும் தெரிவிக்கும் நூலாகவே விளங்குகின்றன. ஆபச்தம்ப தருமசூத்திரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆலிவெல் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கது.1364 சூத்திரங்கள் கொண்ட ஆபச்தம்ப தருமசூத்திரத்தில் 1,206 சூத்திரங்கள் (88%) பிராமணர்களின் வழமைநெறிகளைப் பற்றியே அமைந்துள்ளமையும் 158 சூத்திரங்கள் (12%) ஏனைய செய்திகளைக் குறித்து அமைந்துள்ளமையும் தருமசாத்திரங்களின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குறியாக்குகின்றன.

வரலாற்றறிஞர் பி.டி.சீனிவாச ஐயங்கார், தமிழ்மரபுக்கும் வடநூல் மரபு அல்லது ஆரியமரபுக்கும் இடையேயான வேறுபாட்டைத் தெள்ளத்தெளிவாக அறுதியிட்டுரைக்கிறார்.

“ஆரியமரபு தீவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது. ஒற்றைத் தீ அல்லது முத்தீ வளர்த்து அத் தீயையே தெய்வங்களின் வாயாகக் கற்பனைசெய்து பலிப் பொருளை அளித்து வணங்குவது (அக்கினி) ஆரியமரபு. ஆனால் தமிழ்மரபு தீயைப் பயன்படுத்தா (அனக்னி)

மரபாகும். சமய அடிப்படையிலான பிரித்தாளும் நெறி ஆரியருடையது. சமத்துவ மக்களாட்சி முறை தமிழருடையது.

பிற்காலத்தில் சிந்துநதிக்கரையிலிருந்து கங்கை நதிக்கரை வந்து தெற்கே ஆரியர் வரத் தலைப்பட்டபொழுது தம்மிடையே நிலைபெற்றிருந்த நால்வகை வருணமுறையைத் தமிழர் சமுதாயத்தில் நிலைநாட்ட முடியவில்லை.எனவே முற்றாக அடிமைப்படுத்தித் தம் மேலாண்மையைத் திணிக்கத் தலைப்பட்டனர்."என்று விளக்கமளிக்கிறார். *(p.20.Pre-Aryan Tamil Culture BY P. T. Srinivasa Iyengar M.A.,ASIAN EDUCATIONAL SERVICES,NEW DELHI,1985)*

இவர் அளிக்கும் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போதுதான் வள்ளுவர் தீயை எதிர்மறைப் பொருளாகக் குறிப்பிடுதற்குரிய காரணம் புலனாகின்றது. சினத்துக்குத் தீயை ஒப்பிடுகிறார். தீயைச் சேர்ந்தாரைக்கொல்லி என்கிறார். (குறள்-306) பசியைத் தீக்கு ஒப்பிடுகிறார். (குறள்-947) வறுமையை நெருப்புடன் ஒப்பிடுகிறார் (குறள்-1049). நாகசாமி போன்றோர் திருக்குறளை முறையாகக் கற்றால் சாத்திரங்களின் பிழிவு திருக்குறள் எனப் பொருந்தாது கூறத் துணியார்.

திருக்குறளுக்கு உரை திருக்குறளே எனத் தெளிந்து பயின்றால் நவில்தொறும் அதன் நயம் தலைப்படும் என்பதில் ஐயமுமுண்டோ? ஒரு சில எடுத்துக்காட்டுகளை வழங்கவிழைகிறேன்.

எழுத்து என்பது இலக்கியங்களையும் எண் என்பது அறிவியலையும் குறிக்கும். எனவேதான் எண், எழுத்து இரண்டும் மாந்தர்க்குக் கண் என்கிறார். இன்னும் சற்று விரிவாக நோக்கி எண் அறிவியலையும் எழுத்து

கலையியலையும் குறிப்பதாகக் கொண்டு வள்ளுவர் அறிவியலையும் கலையியலையும் *(Science &Humanities)* இரு கண்களாகக் குறிப்பிட்டார் எனப் பொருள்விரிவாக்கம் செய்கிறார் பேராசிரியர் சி.இலக்குவனார்.

இலக்கியம் நெடுங்கணக்கை அடிப்படையாகக் கொண்டது.நெடுங்கணக்கு இன்றேல் இலக்கியம் சமைக்க இயலாது.ஆயின் இலக்கியத்தைக் கற்கப் புகுவோர் அவ்விலக்கியத்தில் எத்துணைக் 'க'கரம் இடம்பெற்றுள்ளன, எத்துணைச் 'ச'கரம் இடம் பெற்றுள்ளன என்றா ஆய்ந்துகொண்டிருப்பர்? அது போலவே மூலமுதற் பொருளாகிய ஆதிபகவன் அண்டசராசரமாகிய இலக்கியத்தின் முதற்பொருளாய் அமைந்துள்ளது; எனினும் இப் பேரண்டத்தைக் காண்போர் அதன் அமைப்பையும் அழகையும் பயனையும் காண்பதை விடுத்து முதற்பொருள் எங்கே எப்படி அமைந்துள்ளது என ஆயப் புகுதல் தேவையற்ற வேலை என்பதனைத் தமது முதற்குறளிலேயே தெளிவாக்கிவிடுகிறார் வள்ளுவர்.

தூய அறிவை வழிபடுதல் வேண்டும் (குறள்-2), மென்மைமிக்க அழகியலைப் போற்றவேண்டும் (குறள்-3), விருப்பும் வெறுப்பும் கடந்த உயிர்நேயம் வணங்குதற்குரியது (குறள்-4), பேரண்டத்தில் விளங்கும் அத்துணை பொருள்களிலும் சென்று தங்கியிருக்கும் (இறு > இறை > இறைவன்) இறையியல்பைத் தெளிந்தார் மாட்டு மனத்தையும் அறிவையும் இருள்சூழச் செய்யும் ஐயமும் குழப்பமுமாகிய இருவினைகளும் சேரா(குறள்-5), ஐம்புலன்களையும் அடக்கியாள்பவர் நெடிய புகழ்வழ்வு பெற்றுப் பொலிவர் (குறள்-6), பிறருக்கு எடுத்துக் காட்டாகவோ அல்லது பிறரை எடுத்துக்காட்டாகக் கொண்டோ வாழும்வழியை வகுத்துக்கொள்ளாமல்,

உவமான உவமேயம் அற்றுத் தனித்தன்மை பெற்ற மூலப்பொருள் போன்றே, தனித்தன்மை பெற்றுத் திகழ்வோர்க்கு எவ்வித மனக்கவலையும் ஏற்படாது (குறள்-7), அறக்கடலாகப் பொலியும் இறைவனின் ஒரு துளியாக அறச்செயல் ஆற்றுவோர் பிறவிக்கடலை இனிதின் நீந்தும் பெரும்பேறெய்துவர் (குறள்-8), பிரபஞ்சப் பெருவெளியின் ஒவ்வொரு பண்புநலனையும் ஆரத் துய்க்கும் அறிவில்லாதவர்க்குப் புலன்களால் எந்தப் பயனுமில்லை (குறள்-9), உயிர்-உயிரற்றவை, நிலைத்தன-நிலையில்லாதவை என இருவேறுபட்டுத் திகழும் இப் பேரண்டத்தில் ஒவ்வோர் அணுவிலும் இறைவன் இயங்கும் திறமறிந்தோர் பிறவியாகிய பெருங்கடலை முழுவதுமாகக் கடந்துசெல்லும் ஆற்றல்பெற்று விளங்குவார்கள்,அங்ஙனம் இறையியங்கும் திறமறியார் பிறவிக்கடலை நீந்தும் திறனின்றி வாணாளை வீணாளாக வறிதே கழிப்பர் (குறள்-10) என்று குறள் அமைந்தவாறே பொருள்கொண்டால் எந்தச் சமயப்பூசலுமின்றி அனைத்துச் சமயத்துக்கும் பொதுவாய்த் திகழும் பேராற்றலையே வள்ளுவர் பாடியுள்ளார் எனத் தெளியலாம்.

எந்தக் குறளிலும் இடம் பெறாமல் ஆனால் எல்லாக் குறளிலும் இருப்பதாகக் கருதக்கூடிய பரம்பொருளே கடவுள் என்பதால் எந்தக் குறட்பாவிலும் இல்லாத ஆயின் அனைத்து அணுக்களிலும் இருக்கும் கடவுள்(கட+உள்) என்னும் சொல் அதிகாரத்திற்கு மகுடமாக அமர்ந்தது.

பசித்துயர் நீக்கும் விருந்தோம்பலும் உழவுத்தொழிலும் சிறக்க மழை தேவை;மழைநீரைப் போற்றிப் பாதுகாத்தலை வலியுறுத்தும் முகமாக வான்சிறப்பு இரண்டாவது அதிகாரமாக வைக்கப்பெற்றது.வானத்தில் விளங்குவதாகக் கூறப்படும் கைலாயம்,வைகுண்டம் அனைத்தையுமே உழவு

சிறந்தால் இவ்வுலகத்திலேயே காணமுடியும் எனக் கூறுமுகத்தான் வான்சிறப்பு எனத் தலைப்பமைத்தார்..வானத்திற்கு மழை ஒன்றுதான் சிறப்பு வேறு சிறப்பில்லை என அறுதியிடுவதாக அதிகாரத் தலைப்பு அமைந்து விண்ணுலகம், இந்திரவுலகு எனும் பொய்ம்மாயப் புராணங்களைத் தகர்க்கிறது.

ஒரு நாடு உருவாகும்போது அந்த நாட்டுக்காக உழைத்தவர்கள், போராடியவர்கள், இயற்கைச் சீற்றங்களிலிருந்து காத்தவர்கள் என எண்ணற்றவர்கள் அந் நாட்டு உருவாக்கத்தில் பங்கு பெற்றவர்களாக இருப்பார்கள். நன்றியுணர்வு சிறிதுமின்றி அத்தகைய முன்னோடிகளை மறந்துவிடுதல் கொடுமையான வழக்கம்.எனவே அத்தகைய தியாகிகளைப் பனுவலில் பதிந்து எந்நாளும் நினைந்து போற்றவேண்டும் என்பதனை நீத்தார் பெருமை முதற்பாவில் வள்ளுவர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுபோன்றே நாட்டுக்காக உழைத்து நல்லுயிர்நீத்த அறிவியல் வல்லுநர்கள், தொழிலியல்முன்னோடிகள் ஆகியவர்களையும் மக்களின் மனச்சான்றை விளக்கமுறச்செய்யும் துறவிகளையும் ஒருங்கிணைத்தே நீத்தார் எனும் சொல்லால் குறிக்கின்றார் எனப் பொருள்கொள்ளும்போது வள்ளுவத்தின் காலங்கடந்த தொலைநோக்கு தெள்ளிதின் புலனாகின்றது.

எத்தகைய சார்புமின்றி நோக்கினால் தமக்குப் பிந்தைய சமய இலக்கியங்கள் வலியுறுத்திய கடவுள் கோட்பாட்டுக்கும் திருக்குறள் காட்டும் கடவுள் கோட்பாட்டுக்கும் தெள்ளத் தெளிந்த வேறுபாடு காணப்படுகின்றது. “இதுதான் கடவுள்; இதனை வழிபட்டால்தான் உனக்கு வாழ்வில் உய்வு ஏற்படும்”என்று எந்த இடத்திலும் திருக்குறள் அறுதியிட்டுரைக்கவில்லை.

திருமால்,திருமகள்,தவ்வை (மூதேவி) எனும் தொன்மக் குறிப்புகளும் உவமையின் பொருட்டு மொழியப்பெற்றனவே தவிர எவ்வகைச் சமயப் பின்புலத்திலும் கூறப்பெறவில்லை.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (குறள் 619: 62 –ஆள்வினை உடைமை)

என்பதே வள்ளுவர் நமக்கு வழங்கும் அறிவுரை.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். (குறள் 380-அதிகாரம் 38 – ஊழ்) எனும் வள்ளுவரே

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (குறள் 620:-62 – ஆள்வினை உடைமை) என மனித ஆற்றலின் மாண்பைக் கூறுகின்றார்.

பிச்சையெடுத்துத் தான் ஒருவன் வாழவேண்டுமாயின் அத்தகைய வாழ்க்கையை உருவாக்கியதாகக் கருதப்படும் உலகைப் படைத்தவனும் அவ்வாறே பிச்சையெடுத்துத் திரியட்டும் என்று வெகுண்டு உரைக்கிறார் வள்ளுவர்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள் 1062-107 – இரவச்சம்)

திருக்குறள் எவ்வகையிலும் இறைநேயமே வாழ்வுக்குரிய வழியாக யாண்டும் கூறவில்லை.

வகுத்தான், வகைதெரிவான் என்பவையெல்லாம் கடவுளைக் குறிக்கும் சொற்களல்ல.

கடவுள்வாழ்த்து என்றொரு அதிகாரம் வைத்ததற்கும் கடவுளைப் பற்றிய ஒரு சில குறிப்புகளை மொழிந்ததற்கும் என்ன காரணம்?வள்ளுவரே விடையளிக்கிறார்.

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் (குறள் 850: 85 – புல்லறிவாண்மை)

கடவுள் இல்லை என அழுத்தம் திருத்தமாக மறுத்துரைத்திருந்தால் திருக்குறள் நமக்குக் கிடைக்காமலேயே போயிருந்திருக்கும்.

இந்த உலகத்தில் இந்தப் பிறப்பில் நம்மால் இயன்ற அறவினைகளைச் செய்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி அறநெறி வழி வாழ்வோமேயானால் அதுவே வாழும் வழியென வழிகாட்டுகிறார்.

கருமவினை, தலையெழுத்து என்னும் பொருந்தாக் குப்பைகள் தமிழனின் உள்ளத்தில் புகுந்து கோழையாகவும் அடிமையாகவும் மாற்றிவிட்டன.

தமிழனுக்கு மட்டுமல்ல, உலகின் அனைத்து மனிதர்களுக்கும் வள்ளுவர் கூறும் உலகப் பொதுநெறி ஒன்றே ஒன்றுதான்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்
உறையும் தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்-50: 5 – இல்வாழ்க்கை)

**உலகத் திருக்குறள் இணையக்கல்விக்கழகம்** வெளியிடும் செய்திமடல் (திங்கள்தோறும் பத்தாம்நாள் வெளிவருகின்றது.)

வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்புவது நம் கடமை. அதனைப் போன்றே வையகமெங்கும் நடக்கும் திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஓர் இதழ் மூலமாகத் தமிழ்மக்கள் அனைவரும் அறியும்வண்ணம் வழங்குவதும் இன்றியமையாததே.உலகையே சுருட்டி சட்டைப்பையில் இருக்கும் கைப்பேசி வழியாக அறிமுகப்படுத்தும் இணையமும் புலனமும் நமக்கு இப் பணியில் துணைநிற்கும்போது நாம் வாளாஇருக்கலாமா?

ஆங்கிலத் திங்கள்தோறும் பத்தாம் நாள் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தினால் வெளிவரும் இந்த செய்திமடல் உங்களுக்கானது.நீங்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் உங்கள் பகுதியில் நிகழும் குறள் தொடர்பானநிகழ்ச்சிகளை எங்களுக்குஎழுதியனுப்புங்கள்.வழமையான ஒருங்குறி (யூனிகோடு) அச்சுருக்களைப் பயன்படுத்தி சொல் கோப்புகளாக (MS Word) anjal@kuralvirtual.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.படங்கள் இருப்பின் அவற்றையும் தனியே படக்கோப்புகளாக அனுப்புங்கள்.

குறளைப் பரப்பும் பணியில் முனைந்துள்ளஅமைப்புகளையும் சான்றோர்களையும் பற்றிஎமக்குத் தெரிவியுங்கள்.அவ் விவரங்கள் வெளிவந்தால் குறள்பரப்பும் பணிக்கு அறிந்தேற்பு வழங்கிய நிறைவு நம் அனைவருக்குமே ஏற்படும் அன்றோ?

இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு விற்பனைக்கு அல்ல.